பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 07 புதன்கிழமை 21.06.2023 கதிர் 222

# பிரபாகரனின் மரபணு அறிக்கையை வெளியிட இராணுவத்தினர் மறுப்பு

## இனியும் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

**பிரபாகரனின் உடற்கூறாய்வு மற்றும் மரபணு பரிசோதரனை அறிக்கைகளை வெளியிட முடியாது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.**

**தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மரபணு பரிசோதனை அறிக்கையை வழுங்கமாறு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் மிதுன் ஜயவர்தன கோரியிருந்தார்.** ☞ 2



## இது ரகசியம் அல்ல!

ஆட்சியாளர்களால் அறிமுகப்ப டுத்தப்படவுள்ள ஊழல் தடுப்புச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வரவுள்ள நிலையில், வடக்கில் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் பிரதேச செயலன மட்ட உயர் அதிகாரி ஒருவரை உடனடியாகப் பதவி நீக்குமாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்குப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு பரிந்துரைத்திருந்தது தொடர்பான செய்தியை காலைக்கதிர் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். ஆனால் அந்தக் கடிதம் மீது இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மே 26 திகதியிட்டு அனுப்பப்பட்ட அந்தக் கடிதம் கிளிநொச்சி மாவட்டத்தை ஜூன் 2 வந்தடைந்தது. எனவே கொழும்பிலுள்ள பொதுச் சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு அதற்கு முன்னரே அந்தக் கடிதம் கிடைத்திருக்கும். ஆனாலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதே அந்தச் செய்தியின் சாரம். அது பற்றி ஆராய்ந்தபோது, மாதத்தின் ☞ 2

## மட்டு. மாவட்டத்துக்கு புதிய இணைத் தலைவர்

### நசீர் அஹமட் நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவராக சுற்றலாத்துறை அமைச்சர் பொறியியலாளர் நசீர் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதத்தை பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்து அவர் பெற்றுக் கொண்டார்.

தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய மாவட்ட மட்டத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளால் முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல், செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்பது மாவட்ட ஒருங்கிணைப்புகுழுவின் பொறுப்பாகும்.

தற்போதைய பொருளாதார ☞ 12

## வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை முற்றுமுழுதாக டிஜிட்டல் மயமாகும்

வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறையை மனிதக் கடத்தல்காரர்களின் பிடியில் இருந்துவிடுவிப்பதற்காகமுழு வெளிநாட்டுவேலைவாய்ப்புத் துறையையும் டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மீதானதேவையற்ற தலையீடுகளை தடுக்கவும், சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்தவும் இதன் ஊடாக வாய்ப்பு ஏற்படும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரு வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது,

நாடு வீழ்ந்த சமயத்தில் தான் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகபதவியேற்றார். பாராளுமன்றஉறுப்பினர்கள் வீதியில் கொல்லப்பட்டனர். பயங்கரவாதக் குழு ☞ 2

## புதிய எரிபொருள் நிறுவனங்களுக்கான முக்கிய நிபந்தனைகள் திடீரென நீக்கம்

### ஒப்பந்தத்துக்கு ஒரு சில நாள்களின் முன் நடவடிக்கை

நாட்டின் எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிக்க மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இரண்டு நிபந்தனைகள், அந்நிறுவனங்களுடனான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் மாற்றப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இலங்கைபெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஐ.ஓ.சி. என்பன போதுமான டொலர்கள் கையிருப்பை பராமரிக்கத் தவறியதால், கடந்த காலத்தில் எண்ணெய் விநியோகத்தில் வரிசைகள் ஏற்பட்டதாகக் கூறி மின்சக்தி, எரிசக்திஅமைச்சுசினோபெக், ஆர்.எம்.பார்க்ஸ் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது.

வெளிநாட்டு நிறுவனங் ☞ 2

## 9 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பகுதிக்குள் அடித்து வரப்பட்ட இந்திய விசைப் படகில் இருந்த 9 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு. இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட விசைப்படகு ஒன்று நடுக் கடலில் பழுதடைந்துள்ளது. இவ்வாறு பழுதடைந்த படகு அலையில் அகப்பட்டு நெடுந்தீவு நோக்கி



இழுத்து வரப்பட்டுள்ளது. இதனை அவதானித்த கடற்படையினர் நேற்று அதிகாலை படகில் இருந்த 9 தமிழக மீனவர்களையும் மீட்டு நெடுந்தீவு ☞ 2

## ஜனவரியில் மின் கட்டண குறைப்பு

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

குறைந்த பட்ச மின் சார அலகுகளை பயன்படுத் துபவர்களுக்கு 27 சதவீதமான மின் கட்டணத்தை குறைக்க முன்மொழிந்துள்ளதோடு எதிர்வரும் ஜனவரி முதல் விசேட மின்கட்டன நிவாரணம் அளிக்கப்படும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர்கஞ்சனவிஜேசேகர தெரிவித்தார்.

சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ☞ 2

## கடன் மறுசீரமைப்பைச் செய்ய முன்னதாக வங்கிகளின் வராக் கடனை வசூலியுங்கள்

### சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

தேசிய கடன் மறுசீரமைப்பால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், ஆடைத் தொழிலாளர்கள் உட்பட உழைக்கும் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நடுத்தர மக்களை பாதுகாப்பதற்காகக் கடன் மறுசீரமைப்புக்கு முன்னர் பிரதான நிலை வர்த்தகர்கள், செல்வந்தர்கள் அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள 1300 பில்லியன் ரூபா கடன்களை மீள பெற்றுக்கொள்ள நிதி அமைச்சு விசேட கவனம் செலுத்தவேண்டும் என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற வரவு செலவுத் திட்ட அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடுவங்குரோத்துநிலை அடைந்துள்ளபின்னணியில் நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட காரியாலய சட்டமூலம்,ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் என்பன முக்கியமானவை.

வரவுசெலவுத்திட்டகாரியாலயம் அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் விடயதானங்களுக்குள் உள்வாங்கப்படும். ஆகவே இந்தக் காரியாலயம் சிறந்த முறையில் செயற்படுவதற்கான பல யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு கடுமையான மறுசீரமைப்புக்களை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

நம்பிக்கை என்பதை முன்னிலைப்படுத்தி சகல விடயங்களையும் செயற்படுத்த முடியும். கடந்த காலங் களில் சர்வதேச நாணய நிதியத்துக்கு ☞ 2

## எந்தத் தேர்தலுக்கும் எதிர்க் கட்சி தயார்

### தலைவர் சஜித் நேற்று சபையில் தெரிவிப்பு

இந்த ஆட்சி எந்த தேர்தலை நடத்தினாலும் அதற்கு முகம்கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் நிலையியற் கட்டளை 27இன் 2கீழ் கேள்வியெழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர், பயிர் செய்கைகளுக்கு இரசாயன உரங்களை பயன்படுத்துவதை தடை செய்து,சேதன உரங்களை மட்டுமே இடவேண்டும் என்ற ஆட்சியாளர்களின் முடிவால்,விளைச்சல்அழிந்து, விவசாயிகள் உட்பட ☞ 2

## கஞ்சாவுடன் இருவர் கைது

### ஒருவர் முன்னணி உறுப்பினரின் கணவர்

ந.லோகதயாளன்.

பளையில் வாகனம் ஒன்றில் கஞ்சாவை மறைத்து வைத்து எடுத்து வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் அரசியல் கட்சியி ஒன்றின் மகளிர் அணித் தலைவரது கணவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2.16 கிலோ கஞ்சா அவர்களிடம் ☞ 2

## குற்றவாளிகளைத் தேடி விசேட நடவடிக்கைகள்

### அமைச்சர் டிரான் அறிவிப்பு

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கைது செய்வதற்கான விசேட தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடளாவிய ரீதியில் விசேட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 255 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ☞ 2

## கதிர்காம பாதயாத்திரை சென்றவர் காட்டில் யானை தாக்கி உயிரிழப்பு



யாத்திரிகர் ஒருவரின் பின்னனியில் யானையை படத்தில் காணலாம்

(வி.ரி.சகாதேவராஜா)

கதிர்காம ஆடிவேல்விழா உற்சவத்திற்காககாட்டுப்பாதை ஊடாக பாதயாத்திரை சென்ற பெண்ணொருவர் யானை தாக்கஉயிரிழந்துள்ளார்என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் பாதயாத்திரை ஆரம்பமாகி இரண்டாம் நாள் (13) நாவலடிக்கு அப்பால் நடுக்காட்டில் இடம் பெற்றுள்ளது என்று ☞ 2

## சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு

### எதிர்க் கட்சி நேற்றுக் கூடித் தீர்மானம்

சர்வதேசநாணயநிதியத்துடன்அரசுஏற்படுத்திக்கொண்டுள்ள உடன்படிக்கையை எதிர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சிதலைவர்சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றயைதினம் பாராளுமன்ற குழு அறையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

குறித்தகூட்டத்தின்போது, நாடாளுமன்றஉறுப்பினர்கள், தன்னிச்சையாக சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்படுவதன் காரணமாக, அவர்கள் கொண்டு வரும் சகல யோசனைகளுக்கும் நிபந்தனையின்றி ஆட்சியாளர்கள் இணங்க நேரிட்டுள்ளது.

அரசு வெளிப்படைதன்மையுடன் சர்வதேசநாணய நிதியத்துடன் கொடுக்கல், வாங்கலில்ஈடுபடவேண்டும். இதன் மூலம் நாட்டுக்கு சாதகமான நிலைமையை உருவாக்க முடியும் என்ற போதிலும்அதுநடக்கவில்லை

நாட்டுக்கு பாதிப்பான நிபந்தனைகளுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமை மற்றும் உடன்படிக்கையை நாட்டுக்கு வெளிப்படுத்தாமை உட்பட விடயங்களை அடிப்படையாக கொண்டு, நாணய நிதியமும் இந்த ஆட்சியும் ஏற்படுத்திக்கொண்டு உடன்படிக்கையை எதிர்க்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

தன்னிச்சையான ☞ 2

## பாலியல் லஞ்சம் தொடர்பில் சட்டமூலத்திற்குத் திருத்தங்கள்

### பெண் எம்.பிக்கள் ஒன்றியம் முன்வைப்பு

நாடாளுமன்றத்தில் இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப் படவுள்ள ஊழல் எதிர்ப்புசட்டமூலத்துக்குநாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின்ஒன்றியம் மற்றும் பாலினம் பற்றிய துறைசார்மேற்பார்வைக்குழு சார்பில் பாலியல் இலஞ்சம் தொடர்பான எண்ணக்கரு ஊழல்எதிர்ப்புசட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தொடக்க வாரத்தில் ஒருநாள் மட்டுமே பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் கூட்டம் நடைபெறும். இந்த மாதத்துக் கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டபோது அமைச்சின் கடிதம் கிடைத்திருக் காமலிருக்கலாம். அல்லது கிடைத்தும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்காமல் விடுபட்டிருக்கலாம், அதனால் அமைச்சின் பரிந்துரை மீது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் முடிவு இன்னும் வெளிப்படாமல் இருப்பதற்கான நியாயமான காரணங்கள் இருக்கக்கூடும்.

இதற்கிடையில் ஜூன் 17 இரவு கண்டாவளையில் ஒரு பெரும் இரவு விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது. அந்த விருந்தில் 8 பேர் கலந்துகொண்டிருந்தனர். மதுவும் தாராளமாகப் புழங்கிய விருந்தை ஏற்பாடு செய்திருந்தவர் சிக்கலுக்குரிய அதிகாரிதானாம். ஆனால் விருந்து நடந்ததென்னவோ அந்தப் பகுதி அரச அலுவலகத்தில் பணியாற்றி அங்கேயே தங்கியிருக்கும் மற்றொரு உயர் அதிகாரி வீட்டில்.

அதில் கொழும்பில் இருந்துவந்த சிறப்பு அழைப்பாளர் ஒருவரும் பங்கேற்றிருந்தார். அவர் கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் முக்கிய பதவியில் இருந்தவர். பின்னர் பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் பதவி வகித்தவர். இன்னும் ஆணைக்குழு அலுவலக மட்டத்தில் செல்வாக்கோடு இருப்பவர் என்றும் சொல்லப்படுகின்றது. அவர் இந்த விருந்துக்கு வருந்தி அழைக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதுதான் ஆராயப்பட வேண்டிய முக்கிய கேள்வி.

வந்த இடத்தில் அந்த மனுசன் ஓவராகத் தண்ணியப் போட்டு, பார்ட்டி சரியில்லை என்று சிங்களத்தில சலம்பிக்கொண்டு புறப்பட்டுப் போனது ஒருபுறமிருந்தாலும் ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்றிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள அதிகாரி ஒருவர் சார்பில், தன் மீதான நடவடிக்கையைத் தீர்மானிக்கவுள்ள துறைக்குள் செல்வாக்கு மிக்கவர் என்று கருதப்படும் நபர் ஒருவரை அழைத்து விருந்து கொடுப்பது, அதுவும் மது விருந்து கொடுப்பது "அருமையிலும் அருமையாக" நடக்கக் கூடியது. அப்படி நடக்கும் போது எம்மைப் போன்ற பத்திரிகையாளர்களுக்கு மூக்கு வேர்ப்பதும் தவிர்க்க முடியாததாகின்றது.

பார்க்கலாம் ''பாரட்டி'' யின் மகிமை எப்படியெல்லாம் வேலை செய்கின்றது என்று.

**இடிமின்னல்**

(idiminnal23@gmial.com)

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த விண்ணப்பத்தில், உயிரிழந்தது பிரபாகரன் என்பதை உறுதிசெய்வதற்கு யாரிடமிருந்து மரபணு மாதிரிகள் பெறப்பட்டன? எப்போது அவை பெறப்பட்டன, என்பது தொடர்பான தகவல்கள் கேட்டகப்பட்டிருந்தன.

குறித்த விண்ணப்பமானது 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தலைமையகம் என்பவற்றக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது, 'தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், குறித்த தகவல்களை வழங்கினால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்' என்று குறிப்பிட்டு இலங்கை இராணுவமும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சும் தகவல் கோரிக்கையை நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

அதேநேரம், குறித்த பதிலால் திருப்தி அடைய முடியாதுள்ளதால் இலங்கை தகவலறியும் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் ஊடகவியலாளர் மிதுன்ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## எந்தத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுமொத்த மக்களும் நிர்க்கதிக்குள்ளாகினர்.

அத்துடன் இரசாயன உரங்கள் மற்றும் நானோ நைட்ரஜன் உரங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை மேற்கொண்டமையால், நாட்டின் நிதி வளம் பயனற்ற செயல்களுக்குச் செலவிட்டது.

இதனால் இந்நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு பெரிது. இது போன்ற தவறான முடிவுகளால் ஒட்டுமொத்த மக்களையும் பாதிப்புக்குட்படுத்த காரணமான நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

இதனால் இந்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களை ஈடுகட்டத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதை அரசாங்கம் நாளுக்கு நாள் தாமதப்படுத்தி வருகிறது.

தற்போது விவசாயிகளுக்கு நெல்லுக்கான நியாயமான விலை கிடைக்கவில்லை. சந்தையில் அரிசியின் விலை 220 ரூபாவுக்கு விற்பனை செய் யப்படுகிறது. ஆனால் விவசாயிகளிடமிருந்து 80 ரூபாவுக்கே நெல் கொள்வனவு செய்யப்படுகிறது. நெல்லுக்கான நியாயமான விலை குறித்து அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

இதன்போது, சபையில் இருந்த விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கையில், லுனுகம் வெகர பிரதேசத்தில் 125 ரூபாவுக்கு அரிசி விற்வனை செய்யப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் நீண்டகாலமாக கடைக்கு சென்று இதுதொடர்பில் கவனிக்காமல் இருந்து வந்திருக்கிறார் என்றார்.

## குற்றவாளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காலப்பகுதியில் 34 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் திட்டமிட்ட குற்றச்செயல்கள் மற்றும் ஏனைய சம்பவங்களும் உள்ளடங்குகின்றன.

கடந்த வருடத்தில் 60 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியிருந்தன. இந்நிலையில், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஆகவே இவற்றைக் கட்டுப்படுத்த வதற்கு பொலிஸார் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 9 இந்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை முகாமிற்கு அழைத்து வந்தனர்.

படகில் இருந்து மீட்ட 9 தமிழக மீனவர்களையும் கைதுசெய்த கடற்படையின் சட்ட நடவடிக்கைக்காக அவர்களை நெடுந்தீவுப் பொலிசாரிடம் கையளித்தனர்.

பொலிசார் அவர்களை யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் ஊடாக நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர்.

## பாலியல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மகிழ்ச்சியடைவதாக ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பர்னாந்துபுல்லே சபாநாயகருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். எனினும், 2023 ஜூன் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள விவாதத்துக்கு முன்னர் மறுசீரமைக்கப்பட வேண்டிய இரண்டு முன்னுரிமைகள் இனங்காணப்பட்டுள்ளதாக சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே அறிவித்துள்ளார்.

அதில் முதலாவதாக, சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பாலியல் நாட்டம்' எனும் குற்றத்தில் மாற்றம் ஏற்படவேண்டும் எனவும், 'நாட்டம்' என்பதன் மூலம் குற்றம் சிறிதாக்கப்படுவதாகவும் அதனால், அதற்குப் பதிலாக 'பாலியல் இலஞ்சம்' எனும் பதம் மூலம் செயற்பாட்டின் குற்றத்தின் தீவிரத்தன்மை சிறந்த முறையில் காட்டப்படுவதால் அந்தப் பதத்தை பயன்படுத்துமாறும் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இரண்டாவதாக, சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலஞ்சம் சம்பந்தமாக, இலஞ்சம் வழங்கும் நபர் ஒருவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க முடியும்' எனும் கருத்தைக் கொண்ட பிரிவைக் காரணமாகக் கொண்டு 'பாலியல் இலஞ்சம்' என்பதில் உள்ள பாலினம் காரணமாக, பாலியல் இலஞ்சம் தொடர்பில், இலஞ்சம் வழங்கும் நபருக்கு அநியாயம் இழைக்கப்படக்கூடும் என சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் பாலியல் இலஞ்சம் வழங்கும் நபர் ஒருவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதை தடுக்கும் வகையில் விதிவிலக்கொன்றை உள்வாங்குமாறு கோரிக்கை விடுப்பதாக பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு பல நிபந்தனைகளின் அடிப்படையில், எரிபொருள் பிரச்சினையை நிவர்த்திப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும். ஒரு நிறுவனம் இலங்கையில் எரிபொருளை விற்று, அதன் மூலம் ஈட்டும் வருமானத்தை, குறித்த எரிபொருள் தொகையை கொண்டு வந்த ஒரு வருடத்தின் பின்னரே நாட்டில் இருந்து வெளியே கொண்டு செல்ல முடியும் என்பது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் ஒன்றாகும்.

அத்துடன், அந்த வருமானத்தை டொலராக மாற்றுவதற்கு 9 மாதங்களின் பின்னரே அனுமதி வழங்கப்படுமெனவும் அடிப்படை நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதாந்த அடிப்படையில் நாட்டிற்கு கொண்டுவரப்படும் பெட்ரோலிய உற்பத்திப் பொருட்களின் மொத்த மாதாந்த விற்பனை மதிப்பில் ஒரு சதவீதம் அமைச்சு அல்லது பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்தால் சேமிக்கப்படும்.

எவ்வாறாயினும், மே 22 ஆம் திகதி சினோபெக் உடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு 4 நாட்களுக்கு முன்னர், மே 19 ஆம் திகதி இந்த இரண்டு நிபந்தனைகளும் அமைச்சரவை பத்திரமொன்றினால் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய வாக் குறுதிகளை புறக்கணித்து அரசு செயற்பட்டதை ஆராய்ச்சி நிறுவனங்கள் அறிக்கையாக வெளியிட்டுள்ளன.

கசினோ வரி அறவிடல் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு நிறைவேற்றவில்லை.

கசினோ ஒழுங்குப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு தொடர்பில் புதிய சட்டம் இயற்றுவதாக அரசு வாக்குறுதி வழங்கியது. இருப்பினும் அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை கூட இதுவரை எடுக்கப்படவில்லை.

டிஜிட்டல் சேவைகளுக்கு எவ்வித வரிகளும் அறவிடப்படுவதில்லை. நல்லாட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட டிஜிட்டல் சேவை தொடர்பான வரி தொடர்பான சட்ட மூலம் வெகுவிரைவில் சட்டமாக்கப்படவேண்டும்.

பொது ஜன பெரமுன ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற சீனி வரி குறைப்பு மோசடி தொடர்பான அறிக்கையை கோப் குழுவின் முன்னாள் தலைவர் அனுரபிரியதர்ஷன யாப்பா நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சீனி வரி குறைப்பால் 16 மில்லியன் ரூபா அரச வருவாய் இழக்கப்பட்டுள்ளது என கணக்காளர் நாயகம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். பிணைமுறி மோசடியை காட்டிலும் இந்த மோசடி பாரதூரமானது.

அறிக்கையை அடிப்படையாக கொண்டு நிதியமைச்சு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

சீனி வரி குறைப்பின் பயனின் 45 சதவீத இலாபத்தை ஒரு தனி நிறுவனம் பெற்றுள்ளது. வலுவான 6 நிறுவனங்கள் சம இலாபத்தை பெற்றுக்கொண்டுள்ளன.

இந்த நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் சாதாரண மக்கள் மீது வரி சுமத்துவது முறையற்றது. மறுபுறம் இந்த மோசடி தொடர்பில் நாடாளுமன்ற கோப் குழு வழங்கிய அறிக்கைக்கு நேர்ந்தது என்னவென்பதை நிதியமைச்சு பகிரங்கப்படுத்த வேண்டும்.

தேசிய கடன்களை மறுசீரமைக்க ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளதால் வங்கி கட்டமைப்பு நிச்சயம் பாதிக்கப்படும். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் சாதாரண வைப்புக்களுக்கும் பாதிப்பு ஏற்படும்.

பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய மதுசார உற்பத்தி நிறுவனம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய அரச வங்கிகளிடம் இருந்து பெற்றுக்கொண்ட 7 பில்லியன் ரூபாவை மீள செலுத்தவில்லை. இதற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்கிக் கட்டமைப்பைப் பலவப்படுத்த வேண்டுமாயின் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு முன்னர் பலம் வாய்ந்த முன்னணி தரப்பினர் வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ள கடன்களை மீள பெற்றுக்கொள்ள நிதியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதி அமைச்சின் செயற்பாடுகள் கேள்விக்குள்ளான நிலையில் உள்ளது. வரி அதிகரிப்பால் தொழிற்துறையினர் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். தேசிய கடன் மறுசீரமைப்பால் பெருந்தோட்ட தொழிலாளர்கள், ஆடைத் தொழிலாளர்கள் உட்பட உழைக்கும் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நடுத்தர மக்களை பாதுகாப்பதற்காக கடன் மறுசீரமைப்புக்கு முன்னர் பிரதான நிலை வர்த்தகர்கள், செல்வந்தர்கள் அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள 1300 பில்லியன் ரூபா கடன்களை மீள பெற்றுக்கொள்ள நிதி அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## கதிர்காம .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் கதிர்காமத்திலிருந்து சுமார் 45 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நாவலடி தீர்த்தக் கிணற்றுப் பகுதியால் பயணித்தபோதே யானைத்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

உயிரிழந்த பெண் 63 வயதுடையவர். மட்டக்களப்பை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது சடலத்தை மீட்டு உடற்கூறாய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். காட்டுப் பாதை ஜூன் 12 திறக்கப்பட்ட நாள் முதல் பத்து நாட்கள் வரை யானை தாக்கிய ஒரேயொரு சம்பவம் இதுவென்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பறவைக்குளம் மற்றும் கதிரமலை கண்ட இடம் போன்ற இடங்களிலும் பாதயாத்திரை சென்றவர்களுக்கு யானைகளின் தலையீடு இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கஞ்சாவுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து திங்கட்கிழமை கைப்பற்றப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர். அதிகாலைவேளை பளைப் பகுதியில் சுற்று காவலில் ஈடுபட்ட பொலிஸார் இந்த இருவரையும் கைது செய்துள்ளனர்,

பட்டாரகவாகனம் ஒன்றை மறித்துச் சோதனையிட்ட பொலிஸால் அதற்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த கஞ்சாவைக் கைப்பற்றினர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் துரையன் ஜெகதீஸ்வரன். இவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி மகளிர் அணித் தலைவி ஜெகதீஸ்வரன் சற்குணேஸ்வரியின் கணவராவார். இவர் மீது ஏற்கனவே இரண்டு கஞ்சா வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் கடந்த வருட இறுதிப் பகுதியிலும் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் பொலிசாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் ஜெகதீஸ்வரன் சற்குணேஸ்வரி அண்மையிலல் கைது செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

## ஜனவரியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் விசேட மின் கட்டண நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதற்கு திட்டப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன். மின்சாரக் கட்டணம் அதிகம், எரிபொருளின் விலை அதிகம், ஜனவரி முதலாம் திகதிய மின்சாரத் திருத்தத்துக்கான முன்மொழிவை, நவம்பரில் தாருங்கள் என, நான் கேட்கிறேன். இப்போது ஜூலையில் மேற்கொள்ளும் திருத்தத்தினூடாக குறிப்பிட்ட அளவில் கட்டணங்கள் குறையும்.

குறிப்பாக, 0-30, 30-60, 60-90 வரையான அலகுகளுக்கு மிகக் குறைந்த மின் கட்டணம் அறவிடப்படும். ஜனவரியில் இத்திட்டத்தை கொண்டு வந்து மின் கட்டணத்துக்கு உறுதியான நிவாரணம் வழங்கப் பணியாற்றி வருகிறோம்.

இதேவேளை, நாட்டில் 95 ஒக்டேன் பெற்றோல் உள்ளிட்ட ஏனைய பெற்றோலிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை. கடந்த இரண்டு நாட்களாக பல வகையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகின.

அவைதவறானதகவல்களாகும். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனத்துக்கு சொந்தமான பெற்றோலிய நிலையங்களில் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது. அதனை வழங்குவதற்கான அனைத்து பணிப்புரைகளையும் விடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்களைத் தவிர்த்து, வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்ற பட்சத்தில் நல்ல விடயங்களுக்கு பொறுப்பான எதிர்க்கட்சியாக பங்களிப்பதற்கு தயாராகவே உள்ளோம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டில் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை வீழ்ந்த இடத்திலிருந்து தூக்கி நிறுத்தினார்.

மக்கள் வாழக்கூடிய சூழல் நாட்டில் ஏற்படுத் தப்பட்டது. தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணித்தார். வெவ்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் நாட்டு நலனுக்காக அனைவரையும் அழைத்து ஆட்சியமைக்க நடவடிக்கை எடுத்தார்.

வீழ்ந்த இடத்தில் இருந்து நாட்டை கட்டியெழுப்புவதில் பொருளாதார சிக்கல் காணப்பட்டது. நாட்டில் டொலர் கையிருப்பு இருக்கவில்லை. நாட்டிற்கு டொலர்களை கொண்டு வருவதில் நாமும் பொறுப்பு ஏற்றோம். மூன்று லட்சத்து பன்னிரண்டாயிரம் தொழிலாளர்கள் தொழிலுக்காக வெளிநாடு சென்றனர்.

அதன் மூலம் இதுவரை 4800 மில்லியன் டொலர்களை நாட்டுக்கு கொண்டு வர முடிந்தது. வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்கள் அதற்குப் பங்களித்தனர். டொலர் கையிருப்பு அளவு அதிகரித்துள்ளதால் நாடு இன்று இந்த நிலையை அடைந்துள்ளது.

அன்று 80 சதவீதமாக இருந்த பணவீக்கம் இன்று 25 சதவீதமாக குறைந்துள்ளது. நாட்டு மக்கள் வாழக்கூடிய சூழலை உருவாக்க வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் பங்களிப்புக்கு எமது கௌரவத்தை தெரிவிக்கிறோம்.

நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம். நாட்டில் உற்பத்திப் பொருளாதாரம் உருவாக வேண்டும். முதலீடுகளுக்கு பல்வேறு தடைகள் இருக்கலாம். தொழிலாளர் சட்டங்கள் கடுமையாக உள்ளது. எனவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்க வேண்டும்.

அதற்கு, தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் தொழிலாளர் சட்டங்களை மாற்ற வேண்டும். நமது நாட்டின் தொழில் வளங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். நாட்டிற்கு நல்ல சமூக பாதுகாப்பு கட்டமைப்பு அவசியம். சமூகப்பாதுகாப்புத் திட்டத்திற்கான சட்டமூலம் தயாரிக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் முதற்கட்ட அனுமதியைப் பெற்ற பின்னர் அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

சட்டவிரோத குடியேற்ற பிரச்சினைகள் மீண்டும் ஏற்படாத வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தேவையற்ற தலையீடுகள் மற்றும் தவறுகளை களைவதற்கு வெளிநாட்டு சேவை துறையை முழுமையாக டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழுவின் ஊடாக நிதியமைச்சு தேவையான முழுமையான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் அதனை அமைச்சரவையில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கை மனிதக் கடத்தல்காரர்களின் செயல்பாடுகளை தடுக்க உதவும். அதேபோல், தொழிற் துறையையும் டிஜிட்டல் மயமாக்க வேண்டும். ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி மற்றும் ஈ-சம்பள சேவை உள்ளடங்கிய டிஜிட்டல் மயமாக்களுக்குத் தேவையான கேள்வி மனு நடைமுறை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர்கள் முதல் மருத்துவர்கள் வரை அனைத்துத் தொழில்களுக்கு உரிய மதிப்பு கிடைக்கும் வகையில் அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்டில் எந்த தொழிலும் பதிவு செய்யப்பட வேண்டும். நாட்சம்பளம் பெறும் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புப் பலன்களை வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறோம்.

சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதை முற்றாக நிறுத்த அவசியமான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஊழியர் சேமலாப நிதியத்தை சேகரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இவை அனைத்தையும் ஒன்றிணைத்து டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கட்டமைப்பொன்றினை நாம் முன்னெடுத்துச் செல்வோம்.

அதேபோல் 'மெஹெவர பியச' வில் பல மாடிகள் வெறுமையாக கிடக்கின்றன அவற்றை முதலீட்டாளர்களுக்கு பெற்றுக் கொடுத்து வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கு இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளித்தமையால் 70% டொலர்களை நாட்டிற்குள் தக்க வைத்துக்கொள்ள முடிந்துள்ளது. உலகின் எந்தவொரு நாட்டில் தொழில் புரிந்தாலும் இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி செப்டெம்பர் மாதம் வரை வழங்கப்படும்.

வெளிநாடுகளின் பணி புரிவோருக்கான பல்வேறு நலன்புரித் திட்டங்கள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான தொழில் பயிற்சிகளும் இளைஞர் யுவதிகளிக்கு வழங்கப்படுகின்றன. அதற்கான முதல் அத்தியாயமாக யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி படழுடியடகுயசை திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நாட்டில் 40 சதவீதத்தினர் மாத்திரமே நேரடி தொழில்களை செய்கின்றனர். ஏனைய 60 சதவீத மானவர்கள் மறைமுகமான தொழில்களையே மேற்கொள்கின்றனர்.

அதனால் அவர்களுக்கும் பிரவசவ பலன்கள், தொழில் அற்றுப்போகும் போதான கொடுப்பனவுகள், விபத்துக்களின் போதான கொடுப்பனவுகள் ஆகியவற்றை நிதியம் ஒன்றின் கீழ் பெற்றுக்கொடுப்பதற்கான காப்புறுதி ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை நோக்கமாக கொண்டே கட்சி மற்றும் நிற பேதங்களை பார்க்காமல் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனால் தங்களது அரசியல் எதிர்காலம் பற்றி சிந்திக்காது பொது மக்களின் நலன் கருதிய தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் ஒன்றை கொண்டு வர முற்படும் போதும் போலியான சித்தரிப்புக்களை அவதானிக்க முடிகிறது. ஊடகங்களை முடக்குவதற்காக அந்த சட்டமூலத்தை கொண்டு வரவில்லை. ஊடகங்களை கட்டுப்படுத்த வேண்டிய அவசியமும் அரசாங்கத்திற்கு இல்லை.

ஒளிபரப்புச் சட்டமூலத்தில் ஐந்து அல்லது ஆறு முக்கிய காரணிகள் உள்ளடங்கியுள்ளன. அவற்றில் அரசியலமைப்பில் உள்ளதை போன்று கருத்துரிமையை பாதுகாக்கவேண்டும் என்பதே முதன்மையான விடயமாகும். அதனால் கருத்துரிமையை பறிக்க முடியாது. உண்மையான தகவல்களை அறிந்துக்கொள்வதற்கான உரிமை மக்களுக்கு கிடைக்க வேண்டும். நாம் சுய கட்டுப்பாட்டின் கீழ் உண் மைத் தகவல்களை சமூகமயப்படுத்தவேண்டியது அவசியமாகும்.

ஒளிபரப்பு அதிகார சபையின் சட்டத் திட்டங்களையும் ஒளிப்பரப்பாளர்கள் சங்கத்தினரே தயாரிக்கப்போகிறார்கள். அரசாங்கம் தலையீடுச் செய்யாது. ஊடகங்களையோ ஊடகவியலாளர்களையோ முடக்கப்போவதில்லை.

அனுமதிப்பத்திரங்களும் அவ்வண்ணமே வழங்கப்படும். எவ்வாறாயினும் அவர்களினால் வெளியிடப்படும் தகவலகளை சுயாதீன குழுவொன்றின் கீழ் தேடிப்பார்க்க வேண்டியது அவசியமாகும். கடந்தகாலங்களில் சில ஊடங்களினால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கு மீண்டும் இடமளிக்க கூடாது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்காக சேவையாற்றுகையில் சேறு பூசல்கள் அதிகம் ஏற்படலாம். நான் ஒரு போதும் எந்தவொரு மனித கடத்தல் காரர்களுடனும தொடர்புகளை பேணவில்லை. சமூக வலைத்தளங்க

தொடர்ச்சி 12ம் பக்கம்

# ஆட்சியைப் பொறுப்பேற்கத் தயார்; தேர்தலை விரைந்து நடத்துங்கள்!

## நாமல் எம்.பி. வலியுறுத்து

அரசியல் ரீதியில் நாங்கள் எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை மக்கள் தற்போது விளங்கிக்கொண்டுள்ளார்கள். வெகுவிரைவில் புதிய அணியாக ஆட்சியைப் பொறுப்பேற்போம். ஆகவே, தேர்தலைவிரைவாகநடத்துமாறுஅரசிடம் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ஷக்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசியல் இலாபம் அடைவதை ஒரு தரப்பினர் பிரதான அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். எனினும், அவை எதுவும் நிரூபிக்கப்படவில்லை. 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான பழியை ராஜபக்ஷக்கள்மீது சுமத்துவதற்கு ஒரு தரப்பு முயற்சிக்கின்றது. எனவே, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணையை விரைவுபடுத்தி உண்மை அம்பலப்படுத்தப்பட வேண்டும்.



ராஜபக்ஷக்கள் நாட்டை அழித்து ஆட்சிக்கு வரவில்லை. மாறாக நாட்டைப் பாதுகாக்கவே வந்தனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு எடுத்த ஒருசில தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

பொருளாதாரப் பாதிப்பை அரசுக்குள் இருந்தவர்கள் அரசியல் நெருக்கடியாக்கினார்கள். ஜனநாயகப் போராட்டம் என்று குறிப்பிட்டுக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டை அழிப்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தினோம். கடந்த வருடம் அரசியல் ரீதியில் நாங்கள் எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள். வெகுவிரைவில் புதிய அணியாக ஆட்சியை பொறுப்பேற்போம். ஆகவே, தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசிடம் வலியுறுத்துகின்றோம். - என்றார்.

# மக்கள் பிரதிநிதிகளின் வலியுறுத்தல்களுக்கு அமையவே ஆளுநர்கள் பதவி நீக்கப்பட்டனர்

## இப்படிக் கூறுகிறார் சாகர

மாவட்ட அரசியல்வாதிகளுடன் இணக்கமாக செயற்படாத காரணத்தால் வடக்கு,கிழக்கு மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்கள் பதவி நீக்கப்பட்டார்கள்.

மாகாண சபை தேர்தல் இல்லாத நிலையில் ஆளுநர்கள் மாவட்ட அரசியல்வாதிகளுடன் இணக்கமாக செயற்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் ஆதரவாளர்களுக்கு மாகாண ஆளுநர் பதவி வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவில்லை. ஜனாதிபதியின் விருப்பத்துக்கு அமையவே அண்மையில் மூன்று மாகாணங்களுக்கான ஆளுநர் நியமனம் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய நியமனத்தால் வடக்கு,கிழக்கு மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பதவி நீக்கப்பட்டார்கள் என குறிப்பிடப்படுகின்றமை அடிப்படையற்றது.

மாகாண சபை தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதிகளான ஆளுநர்கள் மாவட்ட அரசியல்வாதிகளுடன் இணக்கமாக செயற்பட வேண்டும். ஆனால் வடக்கு,கிழக்கு மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களின் ஆளுநர்கள் அந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுடன் இணக்கமாக செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டை பொதுஜன பெரமுனவின் மாவட்ட அரசியல்வாதிகள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பலமுறை முன்வைத்தார்.

அதேபோல், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் மாவட்ட அரசியல்வாதிகள் அதே குற்றச்சாட்டை முன்வைத்தார்கள்.

ஆகவே, மக்கள் பிரதிநிதிகளின் வலியுறுத்தலுக்கு அமையவே மாகாண ஆளுநர்கள் பதவி நீக்கப்பட்டார்களே தவிர அவர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நியமனம் என்பதால் பதவி நீக்கப்படவில்லை.

மாகாணஆளுநர்கள்ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக இருந்தாலும் அவர்கள் மாவட்ட அரசியல்வாதிகளுடன் இணக் கமாக செயற்பட வேண்டும். - என்றார் (05)

# மாகாண சபைத் தேர்தலையாவது உடனடியாக நடத்திக் காட்டுங்கள்!

## அரசுக்குச் சஜித் சவால்

துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலையாவது உடன் நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசுக்குச் சவால் விடுத்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

மக்கள் எவ்வாறானதொரு ஆணையை வழங்கினாலும் அதனை ஏற்பதற்கு நாம் தயார். எனவே, மக்களின் நிலைப்பாட்டை அறிய தேர் தல் நடத்தப்பட வேண்டும். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத்தேர்தல், மாகாணசபைத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகிய-வற்றில் எதையாவது ஒன்றை விரைவில் நடத்தவும். - என்றார்.

# சுக்குநூறாகின்றது சஜித்தின் கூட்டணி

## ஹரிசன் அதிரடித் தகவல்

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் எல்லாம் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் வந்துவிடும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் தாவியுள்ள முன்னாள் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

எமது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்றார். அவருக்கான ஆதரவு பெருகி வருகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளது. தற்போது சஜித் கூட்டணியில் உள்ளவர்கள் அடுத்த தேர்தலில் ஜனாதிபதியை ஆதரிப்பார்கள். ஐக்கிய மக்கள் கூட்டணியில் உள்ள தமிழ், முஸ் லிம் கட்சிகள் எல்லாம் ரணில் பக்கம் வந்துவிடும். -என்றார்.

# மலையக மக்கள் சுரண்டப்படும் விடயத்தை சர்வதேசத்துக்கு தெரிவிப்பதற்காக ஜெனீவா செல்கின்றார் அமைச்சர் ஜீவன்

மலையமக்கள் சுரண்டப்படும் விடயத்தை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டுவரும் நோக்கில் ஜெனீவா செல்லவுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பேட்டியொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.



தேயிலை தொழில்துறையில் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் சுரண்டல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்காக ஜெனீவாவில் ஒக்ரோபரில் இடம்பெறும் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் தனது தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குழு இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் சுரண்டல்களை அம்பலப்படுத்தவேண்டிய தருணம் இது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் சர்வதேச தேயிலை கொள்வனவாளர்களிடம் தாங்கள் நியாயமான வர்த்தகம் மற்றும் நெறிமுறை நடைமுறைகளை கடைப்பிடிப்பதாக பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் தெரிவிக்கின்ற போதிலும் உண்மையில் அவர்கள் அவ்வாறு செயற்படவில்லை என்பதை நான் அம்பலப்படுத்தப்போகின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# ரோஹித போகொல்லாகம பிரிட்டன் தூதராக நியமனம்

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பிரிட்டனுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட் டுள்ளது.

இவர், வெளிவிவகார அமைச்சராகவும், அதன் பின்னர் சிறிது காலம் கிழக்கு மாகாண ஆளுநராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து – பிரித்தானிய உறவுகளை மேம்படுத்தும் பிரித்தானிய தூதுவரின் முயற்சிக்கு பிரதமர் பாராட்டு

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளுக்காக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கு பிரதமர் தினேஷ் குண வர்தன நன்றி தெரிவித்துள்ளார்.



பதவி விலகும் உயர்ஸ்தானிகரின் பிரியாவிடை நிகழ்வு அலரி மாளிகையில் இடம்பெற்றபோதே பிரதமர் தினேஷ் குணவர்தன அவரின் முயற்சிகளைப் பாராட்டியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தனது பணியை மேற்கொண்ட சாரா ஹல்டன், பல்வேறுதுறைகளில் ஈடுபாட்டுடன் செயற்பட்டார் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிரித்தானியாவின் ஜி.எஸ்.பி. திட்டத்தின் கீழ் 'வளரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின்' கீழ் இலங்கையை ஒரு பயனாளி நாடாக இணைப்பதற்கான தீர்மானத்தையும் பிரதமர் வரவேற்றுள்ளார்.

அத்தோடு கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் முடிவு மற்றும் ஐ.எம்.எப். நிதி உதவியைத் தொடர்ந்து புதிய முதலீட்டு திட்டங்கள் பிரித்தானியாவில் தொடங்கப்படும் என நம்புவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்தும் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குப் பிரதமரின் ஆதரவு தனக்குப் பெரும் பலமாக இருந்ததாக சாரா ஹல்டன் கூறியுள்ளார். (05)

# ரணில் நாடு திரும்பியதும் விடைபெறும் விக்கிரமரத்ன?

புதிய பொலிஸ்மா அதிபர் அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளார் எனத்தெரியவருகின்றது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் சேவைக்காலம் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.



பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன கடந்த மார்ச் 26 ஆம் திகதியன்று ஓய்வு பெறவிருந்தார். எனினும், அவருக்கு மூன்று மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான தேசபந்து தென்னக்கோன், நிலந்த ஜயவர்தன, லலித் பத்திநாயக்க, பிரியந்த வீரசூரிய மற்றும் அஜித் ரோஹன ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதுடன், யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது, புதிய பொலிஸ்மா அதிபர் தொடர்பில், ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவருடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் எனக் கூறினார்.

தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன இலங்கையின் 35 ஆவது பொலிஸ்மா அதிபர் ஆவார். அவர் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்.

# இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கு விதிக்கப்படும் செஸ் வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கு விதிக்கப்படும் செஸ் வரியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த 17ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வரிகள் திருத்தப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி, ஒரு கிலோ செயற்கை நிற அல்லது நிறமற்ற வெள்ளை சீமெந்துக்கு விதிக்கப்பட்ட 3 ரூபா என்ற செஸ் வரி 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 50 கிலோ மற்றும் அதற்கும் குறைவாக இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ சீமெந்துக்கு 5 ரூபாவாக இருந்த செஸ் வரி 8 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. 50 கிலோ மற்றும் அதற்கு மேற்பட்ட பொதிகளை மொத்தமாக இறக்குமதி செய்யும் சீமெந்துக்கான வரி 3 ரூபாவில் இருந்து 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அகதிகளாகவும் அகதிகளுக்காவும் நாம்

திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழன் அதேகடலோடி உலகெங்கும் அகதியாகும் அவலம் இன்றைய சாபக்கேடு. ஆனி 20 உலக அகதிகள் நாள். உலகம் முழுவதும் பரந்துள்ள அரசியல் மற்றும் பொருளாதார அகதிகளான ஈழத் தமிழர்களும் இந்த நாளை மிக முக்கியமாக நினைவுகூர வேண்டியவர்கள்.

உலகில் 6 கோடிப் பேர் அகதிகளாக வெளியேறி இருக்கின்றனர். உலகின் ஏதாவது ஒரு மூலையில் ஒவ்வொரு நிமிடமும் 20 பேர் வீட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். போர் மற்றும் அரசியலே அதற்கான முக்கிய காரணம் என்கிறபோதும் பொருளாதாரத் தேவைகளும் கணிசமான காரரணமாக இருக்கின்றன.

உலகின் 86 சதவீதமான அகதிகள் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்களே. உலகின் மிகப் பெரிய அகதி முகாம் கென்யாவில் அமைந்துள்ளது. அங்கு 3.29 லட்சம் அகதிகள் உள்ளனர்.

உலகில் போர், வன்முறை, வறுமை, வேலை இழப்பு போன்றவற்றால் உடமைகள், உரிமைகள், உறவுகள், இருப்பிடம் என அனைத்தையும் இழந்தவர்கள் அல்லது இ வற்றில் எதையாவது இழந்தவர்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற நேர்கின்றபோது அவர்களை அகதிகள் என்கிறது ஐ.நா.

கடந்த இரண்டு தசாப்தங்களில், மனிதர்கள் ஓரிடத்தில் இருந்து வேறிடம் சென்று வாழ்வது இதுவரை இல்லாத அளவை எட்டியுள்ளது. 2000இல் 17 கோடியே 30 லட்சம் பேர் தாய் நாட்டிற்கு வெளியே வாழ்ந்தனர் எனவும், 2020–ல் அந்த எண்ணிக்கை 28 கோடியே 10 லட்சமாக அதிகரித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது. இது உலக மக்கள் தொகையில் 3.6 சதவிகிதம் ஆகும். 10 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்கும்பொழுதே அகதிகளாக பிறக்கின்றனர். 37 லட்சத்துக்கும் அதிகம் அகதிகள் வாழும் நாடாக துருக்கி உள்ளது.

போர், இயற்கை பேரழிவு, துன்புறுத்தப்படுதல் ஆகியவற்றிலிருந்து தப்பிப்பதற்காக, தங்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளவரே அகதி எனப் பொதுவாக வரையறுக்கப்படுகின்றனர்.

ஒருவரை அகதி என்று நாடுகள் ஏற்றுக்கொண்டவுடன் அவர்களுக்கு என்று சில குறிப்பிட்ட உரிமைகள் உள்ளன என்பதையும் அவை ஏற்றுக்கெகாள்கின்றன என்பது அதன் அர்த்தம். அந்தப் புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துவதற்காகத்தான் உலக அகதிகள் தினத்தைப் பிரகடனப்படுத்தியது ஐ.நா.

இந்த நிலையில்தான் உலக அகதிகள் தினம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால் இந்த தினம்தான் அகதிகள் பற்றிய புரிதலையும் அவர்களின் அன்றாட வாழ்கை நிலையையும் மக்களுக்கும் நாடுகளில் உள்ள ஆட்சிகளுக்கும் நினைவுகூற உதவுகிறது. ஆட்சிகள் மாற மாற அகதிகள் குறித்த அவற்றின் கொள்கைகளும் மாறும் இந்தக் காலகட்டத்தில் அகதிகளின் உரிமைகளையும் உரித்துக்களையும் மதிக்கவும் நிலைநிறுத்தவும் அவர்கள் பற்றிய பரந்துபட்ட புரிந்துணர்வு முக்கியம்.

ஜூன் 20, 1951 அன்று முதன்முதலில் அகதிகளின் நிலை தொடர்பாக மாநாடு ஜெனீவாவில் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டின் 50ஆவது ஆண்டை நினைவுகூறும் விதமாக டிசம்பர் மாதம் 2000இல் அகதிகள் தினம் குறித்த அறிவிப்புகள் ஐக்கிய நாடுகள் சபை மூலமாக அறிவிக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டுக்கு முன்புவரை இந்தநாள் ஆப்பிரிக்க அகதிகள் தினம் என்று அழைக்கப்பட்டது. பிறகு உலக அகதிகள் தினம் என்று பெயர் மாற்றப்பட்டு உலகளவில் உள்ள அகதிகளை நினைவுகூருகின்றது.

இந்த ஆண்டு உலக அகதிகள் தினத்தின் கருப்பொருள் வீட்டிலிருந்து விலகிச்செல்லுங்கள் என்பது அகதிகள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவது மற்றும் பிரகாசமான எதிர்காலத்திற்காக பாடுபடும் செயல்பாட்டில் மன நலத்தின் முக்கியத்துவத்தை இந்தக் கருப்பொருள் வலியுறுத்துகிறது. அகதிகளின் உளவியல் நல்வாழ்வை மேம்படுத்துவது மிகவும் நம்பிக்கைக்குரிய நாளை நோக்கிய அவர்களின் பயணத்தை ஆதரிப்பதில் இன்றியமையாததாகும்.

அகதிகள் மற்றும் தனிநபர்கள் தங்கள் வீடுகளில் இருந்து வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்தவர்களின் அவலநிலை குறித்து உலகளாவிய கவனத்தை ஈர்க்கும் வகையில் உலக அகதிகள் தினம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களின் உரிமைகளுக்காக வாதிடவும், அவர்களின் சூழ்நிலைகளில் பச்சாதாபத்தையும் இரக்கத்தையும் வளர்ப்பதற்கான ஒரு தளமாக இது செயல்படுகிறது.

ஈழத் தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் அகதிகளாகப் பரந்துள்ள நிலையில் அகதிகள் தினத்தைப் புரிந்துகொள்வதும் அதன்படி நடப்பதும் எமது கடமைகளில் ஒன்று.




# யாழ். – சென்னை விமான சேவையில் 150 பேர் பயணிக்க என்னதான் தடை?

ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம்சென்னை இடையேயான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டு அண்மையில் தனது 100 ஆவது சேவையைக்கடந்தது. எனினும் இன்னும் அந்தச் சேவையில் ஒரே தடவையில் 150 பயணிப்பதற்கு வழி வகை இல்லை. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை அதற்குப் போதுமானதாக இல்லைஎன்பதே அதற்குரிய காரணம் எனப்படுகின்றது.




இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான மக்கள் உறவுகளை இந்தச் சேவை மேலும் வலுப்படுத்தும் என யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூரகத்தின் முதன்நிலை அதிகாரியான ராஜேஸ் நட்ராஜ் தெரிவித்தார்.

அதிகரித்த இணைப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பது மட்டுமன்றி சுற்றுலாப் பயணிகளின் வருகையைத்தூண்டி இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்த விமான சேவை உதவும் எனவும் கூறப்படுகின்றது.

உண்மையில் யாழ்ப்பாணம் சென்னை இடையே தற்போது இடம்பெறும் விமான சேவையானது வாரத்தில் 4 தினங்கள் மட்டுமே இடம்பெறுகிறது. இதனை 7 தினங்களுமே மேற்கொள்ள நடவடிக்கையும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவேவ உண்டு. தற்போது சேவையில் ஈடுபடும் ஏ.ரி.ஆர் 72 ரக விமானத்திற்குப் பதிலாக எயார் பஸ் ஏ320 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும் எனவும் கோரப்படுகின்றது.

ஏ.ரி.ஆர் 72 ரக விமானத்தில் தற்போது 60 பயணிகள் மட்டுமே பயணிக்க முடியும். மாறாக எயார் பஸ் ஏ320 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் 150 முதல் 180 பயணிகள் வரை பயணிக்க முடியும் என்பதோடு தற்போது ஒரு பயணிக்கு அனுமதிக்கப்படும் 20 கிலோ பொதி 40 கிலோவாக அதிகரிக்கப்பட வாய்ப்புண்டு என்பதும் இதிலுள்ள சாதகமான அம்சம்.

இதேநேரம் தற்போது சேவையில் ஈடுபடும் ஏ.ரி.ஆர் 72 ரக விமானம் ஒன்று தரை இறங்குவதற்கு 1500 மீற்றர் ஓடுபாதை போதும். அதற்குரிய தாராளமான இடம் பலாலியில் உண்டு. ஆனால், எயார் பஸ் ஏ320 ரக விமானங்கள் தரை இறங்குவதானால்

1800 முதல் 1900 மீற்றர் நீளமான ஓடுபாதை கண்டிப்பாகவேண்டும். இன்றைய நிலையில் அந்தளவு ஓடுதள வசதி பலாலியில் இல்லை. ஆனால், ஓடுபாதையை விரிவாக்கி எயார் பஸ் ஏ320 விமானங்களைத் தரையிறக்கக்கூடிய வாய்ப்பும் இடமும் ஏற்கனவே பலாலிக்குள் உண்டு. அதற்காகத் தற்போதுள்ள ஓடு தளத்தை விரிவாக்க வேண்டிய அவசியமும் கிடையாது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தற்போது 2000 மீற்றர் ஓடுபாதை கைவசம் உள்ளது. அதில் 1,600 மீற்றர் ஓடுபாதை முழுமையாக அமைக்கப்பட்டுள்ளது. 400 மீற்றர் ஓடுபாதையானது கல் மட்டும் போடப்பட்டு சீர் செய்யப்பட்டபோதும் ஓடுபாதையாக சீரமைக்கப்படவில்லை. அதனை சீர் அமைப்பதற்கு 4 மாதங்கள் போதுமானவை.

பலாலியின் விரிவாக்கத்துக்கும் அபிவிருத்திக்கும் நிதி உதவிகளை வழங்க இந்தியா தயாராக இருக்கின்றபோதும், இலங்கை ஆட்சியாளர்கள் அதனைப் பயன்படுத்துவதில் காலதாமதத்தைக் காட்டுவது ஏன் என்பது புரிபடாதஒன்று. இப்போது 300 மீற்றர் ஓடுபாதையையும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா தெரிவித்திருக்கிறார். அது நல்ல செய்தி. அது நடந்தால் சென்னை - யாழ்ப்பாணம் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.

ஏ.ரி.ஆர் 72 ரக விமானத்திற்குப் பதிலாக எயார்பஸ் ஏ320 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட இந்தியாவும் ஆக்கபூர்வமான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள வேண்டும். பயணிகள் எண்ணிக்கையை அதிகரிப்பதில் மேலும் ஒரு சிக்கலும் பலாலியில் உண்டு. அது பயணிகள் தங்கு விடுதியில் உள்ள நெருக்கடி. தற்போது வந்து செல்லும் பயணிகளை ஒரே நேரத்தில் கையாள்வதற்கான வசதியையே அது கொண்டிருக்கவில்லை. அதாவது தற்போது 55 பேர் பயணிப்பனானால் ஒரே நேரத்தில் விமான நிலையத்தில் 110 வரையானோர் தங்கி நிற்கின்றனர். இதற்குப் போதுமான-மட்டுமட்டான - இடவசதியே பலாலியில் காணப்படுகின்றது. இந்த நிலையில் 150 பேர் பயணிப்பதானால் ஒரே தடவையில் 350 பேர் தங்கி நிற்கும் வசதிகொண்ட அலுவலக இட வசதிகள் ஏற்படுத்த வேண்டும். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இருப்பினும் இந்த ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது முதலே பலாலி மற்றும் காங்கேசன் துறையின் அபிவிருத்தி தொடர்பில் தொடர்ந்து பேசி வருகின்றது என்றபோது பணிகள் மட்டும் என்னவோ மந்தமாகவே இருக்கின்றன. அமைச்சரின் அறிவிப்பும் இதுபோன்று இல்லாமல் முறையாகச் செயற்படுத்தப்பட்டு பலாலி விரிவாக்கம் காணவேண்டும்.

350 பேர் தங்கி நிற்கும் இட வசதிக்கான கட்டிட அமைப்பிற்கான நிதியினையும் வழங்க இந்தியா தயாரானபோதும் இலங்கை தரப்பில் அதற்கு இன்னும் பச்சைக்கொடி காட்டவில்லை என அறியப்படுகின்றது. இருப்பினும் இப்போது எந்த நிதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறப்போகின்றன என்பதை அமைச்சர் தெளிவுபடுத்தவில்லை.

**ஏ.ரி.ஆர் 72 ரக விமானத்தில் தற்போது 60 பயணிகள் மட்டுமே பயணிக்க முடியும். மாறாக எயார் பஸ் ஏ320 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் 150 முதல் 180 பயணிகள் வரை பயணிக்க முடியும் என்பதோடு தற்போது ஒரு பயணிக்கு அனுமதிக்கப்படும் 20 கிலோ பொதி 40 கிலோவாக அதிகரிக்கப்பட வாய்ப்புண்டு என்பதும் இதிலுள்ள சாதகமான அம்சம்.**







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Paneer & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swobpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# இறக்குமதித் தளர்வு தொடர்பான முழுமையான அறிக்கை இம்மாத இறுதியில் நாணயநிதியத்திடம்!

## ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

நாடு என்ற ரீதியில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளுடன் தொடர்ந்தும் பயணிக்க முடியாது. எனவே, ரூபாவின் பெறுமதியைத் தொடர்ந்தும் சிறந்த மட்டத்தில் பேணும் அதேவேளை, இறக்குமதித் தளர்வுகளையும் மேற்கொள்ளல் தொடர்பான முழுமையான அறிக்கை இம்மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் தளர்வுகள் மேற்கொள்ளப்படும் போது ரூபாவின் பெறுமதியில் தளம்பல் நிலைமை ஏற்படும். எனவே, ரூபாவின் பெறுமதியை தொடர்ந்தும் சிறந்த மட்டத்தில் பேணுவதற்காக இறக்குமதித் தளர்வுகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை , ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட இவ்வாண்டு முதலாம் காலாண்டில் இறக்குமதி 28 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதே போன்று ஏற்றுமதியும் 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் போது இவ்வாறான நிலைவரங்கள் ஏற்படும்.

எனினும் இவ்வாண்டின் இறுதிக்குள் இந்த நிலைமை வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கின்றோம். இறக்குமதி கட்டுப்பாடுகளால் சுங்க திணைக்களத்திடமிருந்து கிடைக்கும் பாரி யளவு வரி வருமானம் குறைவடைந்துள்ளது. வாகனங்களுக்கான இறக்குமதித் தடை இவ்வாண்டுகள் நீக்கப்பட மாட்டாது.

தற்போது சுமார் 900 பொருள்களுக்கான இறக்குமதித் தடை தொடர்ந்தும் காணப்படுகிறது. இவற்றில் 300 பொருள்கள் வாகனங்களுடன் தொடர்புடையவையாகும். எவ்வாறிருப்பினும் தொடர்ந்தும் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டால் அது சர்வதேச சந்தையில் கொடுக்கல் வாங்கல்களில் பாதிப்பை ஏற்படுத்தும்.



சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கு அமைய, மேற்கூறப்பட்ட காரணிகளையும் கவனத்தில் கொண்டு இம்மாத இறுதியில் இறக்குமதித் தடையில் கால அட்டவணை அடிப்படையில் தளர்வுகளை மேற்கொள்ளல் தொடர்பில் முழுமையான அறிக்கை அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சர்வதேச கடன் வழங்குநர்களிடமும் இது தொடர்பான தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளன. - என்றார். (05)

# கல்வியை இடைநடுவில் கைவிட்டுச் செல்லும் மாணவர்களுக்கு இலவச தொழிற்பயிற்சிகள்


## வழங்குமாறு பிரதமர் தினேஷ் பணிப்புரை

பொருளாதார நெருக்கடிகள் உட்பட மற்றும் பல காரணங்களை முன்வைத்து பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்டுச் செல்லும் மாணவர்களுக்கு இலவசமாக தொழில் பயிற்சிகளை வழங்கி, தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

மஹரகம பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பல்வேறு காரணங்களை முன் வைத்து பாடசாலை கல்வியை இடைநடுவில் கைவிட்டு செல்லும் சிறுவர்கள் குறித்த முறையான அறிக்கையொன்றை தயாரித்து இலவச பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.



கல்வியை இடைநடுவில் கைவிட்டு செல்வதால் அவர்களின் தனிப்பட்ட திறமைகளை வெளிக்காட்ட முடியாமலும், சமூகத்தில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவும் அது வழிவகுக்கும். இது தொடர்பில் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் அறிக்கை பெற வேண்டியது கட்டாயமாகும். மாணவர்கள் இவ்வாறு விலகிச் செல்வதற்கான காரணம் என்ன? என்பது தொடர்பிலும் கண்டறியப்பட வேண்டும். பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு முறையான தொழிற்பயிற்சி வழிகாட்டல்கள் மற்றும் இலவச பயிற்சி நெறிகள் ஏற்பாடு செய்வதன் மூலம் அவர்களின் வளமான எதிர்காலத்துக்கு அது வழிவகுக்கும். - என்றார். (05)

# மயக்க மருந்து செலுத்தியதால் இரண்டரை வயது குழந்தை சாவு

மயக்க மருந்து வழங்கப்பட்ட இரண்டரை வயது குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் குறித்த குழந்தை அனுமதிக்கப்பட்டது.

இதன்போது சத்திர சிகிச்சைக்காக மயக்க மருந்தினை உட்செலுத்த வேண்டும் என்று வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கமைய உட்செலுத்தப்பட்ட மயக்க மருந்து காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளது.

இதனை வைத்தியசாலையின் வைத்தியர்கள் உறுதிப்படுத்தியதாக குறித்த குழந்தையின் தந்தை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக மயக்க மருந்து கொடுக்கப்பட்டது எனவும், இதனால் குழந்தை உயிரிழந்தது எனவும் குழந்தையின் தந்தை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னதாக இரண்டு தடவைகள் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு பெண்கள் மயக்கமடைவதற்காக வழங்கப்பட்ட மருந்தால் உயிரிழந்துள்ளனர்.

மகப்பேற்றுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண்ணொருவரும் மற்றுமொரு பெண்ணும் இவ்வாறு உயிரிழந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளை உரிய முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும் என்று அரச மருந்தாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்தச் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# மீளாய்வின் போது பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்

## தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்கங்க ஒன்றியம் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வின் போது தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என எதிர்பார்த்துள்ளதாக தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த மாத இறுதிக்குள் மீளாய்வு கூட்டம் நடத்தப்படவுள்ளதுடன் இதன்போது எமது எதிர்பார்ப்புகள் சீர்குலைக்கப்படுமாயின் அது தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வின் போது எமது பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என எதிர்பார்த்துள்ளோம். இம்மாத இறுதிக்குள் மீளாய்வு கூட்டம் நடத்தப்படவுள்ளது. இதன்போது முறையற்ற வரிக்கொள்கை தொடர்பில் தாம் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என நம்புகிறோம்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் தாம் முகங்கொடுத்துள்ள சிக்கல்களுக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக ஏற்கனவே உறுதி வழங்கினார்கள் என்பதை நினைவூட்டுகிறோம்.

இந்த நினைவூட்டல் தொடர்பிலான அறிவித்தல் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மீளவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வின் போது தங்களுடைய சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்கும் என்றும் அவ்வாறு எமது எதிர்பார்ப்புகள் சீர்குலைக்கப்படுமாயின் அது தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என சங்கத்தின் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (05)

# மின்மாற்றி, மின்கம்பம், பஸ் தரிப்பிடம் மூன்றையும் மோதிய பஸ்; இருவர் காயம்

## மொரட்டுவையில் சம்பவம்



பாணந்துறை - நுகேகொட பாதையில் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று மொரட்டுவை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பஸ் நிலையம், மின்மாற்றி மற்றும் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டை பஸ் இழந்ததால் விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மின்மாற்றி மற்றும் பஸ் நிலையத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டதுடன் நடத்துநரும் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்த ஒரு பெண்ணும் சிறிய காயங்களுக்குள்ளாகினர்.

சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மொரட்டுவ பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (05)

# காலியில் 200 பாடசாலைகளில் நவீன தொழிநுட்பத்துடன் கூடிய வகுப்பறைகள் இந்திய நிதி உதவியில் உருவாக்கம்!

காலி மாவட்டத்திலுள்ள 200 பாடசாலைகளில் இந்தியாவின் நிதியுதவியின் கீழ் நவீன தொழிநுட்ப வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு இருதரப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க ஆகியோருக்கிடையில் திங்கட்கிழமை இந்தத் திட்டம் தொடர்பான இராஜதந்திர குறிப்புக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன , துணை உயர்ஸ்தானிகர் வினோத் கே. ஜேக்கப் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்திய அரசின் மானிய உதவியின் மூலம் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், வசதி குறைந்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் கல்வித் துறையில் இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பல மானியத் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கைக்கான இந்தியாவின் ஒட்டுமொத்த உதவி தற்போது சுமார் 500 கோடி டொலர்களாகவுள்ளது.

அதில் 60 கோடி அமெரிக்க டொலர்கள் மானியமாகும். நாட்டின் 25 மாவட்டங்களில் 65 இற்கும் மேற்பட்ட மானியத் திட்டங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 20 இற்கும் மேற்பட்ட மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கான பல்வேறு கட்டங்களில் உள்ளன. இந்திய வீடமைப்புத் திட்டம் மற்றும் 1990 சுவசேரிய அம்புலன்ஸ் சேவை ஆகியவை இலங்கையில் இந்திய அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட முதன்மையான மானியத் திட்டங்களாகும். (05)

# கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பு; முட்டைக்குத் தொடர்கிறது தட்டுப்பாடு

சந்தையில் கோழி இறைச்சியின் விலையை வர்த்தகர்கள் வேகமாக அதிகரித்துள்ளதகால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக ஒரு கிலோ கோழி இறைச்சிக்கு 1,450 முதல் 1600 ரூபா வரை வர்த்தகர்கள் அறவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோழி இறைச்சியின் விலை மற்றும் பலவகையான உணவு வகைகளின் விலை உயர்வால் மக்கள் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், சந்தையில் இன்னும் முட்டைக்கு தட்டுப்பாடு நிலவுகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தமானி மூலம் முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (05)

# நேற்று நள்ளிரவு முதல் பாண் விலை குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் 450 கிராம் பாண் இறாத்தல் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டது.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டுள்ளது.

கோதுமை மா விலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் உள்ளிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பணிஸ் உள்ளிட்ட ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலையும் குறைக்கப்படவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரி மீது காழ்ப்புணர்ச்சியுடன் பழிவாங்கல்

## அரவிந்தகுமார் குற்றச்சாட்டு

ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரியின் துறைசார் திறமைமிக்க 51 ஆசிரியர்களின் இடமாற்றம் கல்லூரி மீதான காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய பழிவாங்கும் செயற்பாடாகவே அரங்கேற்றப்பட்டிருப்பது தெளிவாகிறது.

ஆகவே, இடமாற்றத்துக்கு உட்பட்டுள்ள 51 ஆசிரியர்களுக்கு ஈடாக பொருத்தமான அதேநேரம் தகுதியான ஆசிரியர்களை நியமிக்கும் வரையில் குறித்த 51 பேரின் இடமாற்றத்தை உடனடியாக இடைநிறுத்துமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் மத்திய மாகாண ஆளுநரிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்து எழுத்துமூலம் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஹற்றன் கல்வி வலயத்தில் அமையப் பெற்றுள்ள ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரியானது மலையகத்தில் கீர்த்தி மிகு கல்லூரியாக திகழ்ந்து வருகிறது. எனினும் அந்த கல்லூரியின் துறைசார் திறமைமிக்க ஆசிரியர்கள் 51 பேர் ஒரே நேரத்தில் திடீரென இடமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். இச்செயற்பாடு அனைத்து தரப்பினரிடத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஹற்றன் வலயக் கல்வி பணிப்பாளரே இந்த திடீர் இடமாற்றத்துக்கு பிரதான காரணம் என கல்லூரி சமூகத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் கல்லூரி அபிவிருத்தி சங்க அதிகாரிகள் என அனைத்து தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் கல்லூரியின் 51 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து அங்கு நிலவிய ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கென நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் துறைசார் விசேடத்துவ தன்மை எதனையும் கொண்டிருக்கவில்லை என்றும் மேற்கூறப்பட்ட தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

மேலும், ஹைலன்ட்ஸ் கல்லூரிக்கே உரித்தான நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலேயே இவ்வாறு ஒரே தடவையில் 51 ஆசிரியர்களுக்கு இடம் மாற்றம் வழங்கப்பட்டிருப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவு கணிதத் துறைக்கான ஆசிரியரின் இடமாற்றத்துக்குப் பதிலாக தற்போது நியமிக்கப்பட்டிருப்பவர் அத்துறையில் திறமை மிக்கவராக இல்லை எனவும் அவரால் மாணவர்களின் தேவையை நிறைவேற்ற முடியாது எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு ஆசிரியர்கள் திடீரென இடமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டிருப்பதன் ஊடாக அடுத்து வருகின்ற உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகுவர் என்பதை தங்களது கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மேற்படி, வலயக் கல்வி பணிப்பாளருக்கு எதிராக ஏற்கெனவே முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில் அவர் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டி ஏற்பட்டிருந்த காரணத்தால் அதற்கு பழிவாங்கும் முகமாகவே இவ்வாறு ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் 51 ஆசிரியர்கள் திடீர் இடம் மாற்றத்துக்கு உட்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் நிலையிலேயே இவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடு ஒன்றை செயற்படுத்தியிருப்பது தெளிவாகிறது.

இதனடிப்படையிலேயே, குறித்த பணிப்பாளருக்கு எதிராக பாடசாலை சமூகத்தினர் தமது கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தனர் என்பதையும் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

ஆகவே, ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரி விவகாரத்தில் தாங்கள் தலையீடு செய்து கல்லூரிக்கு பொருத்தமான அதேநேரம் தகுதியான ஆசிரியர்களை நியமிக்கும் வரையில் தற்போது இடமாற்றத்துக்கு உட்பட்டிருக்கின்ற 51 ஆசிரியர்களின் இடம் மாற்றத்தையும் இடைநிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, கல்வி அமைச்சின் செயலாளர், மத்திய மாகாண பிரதம செயலாளர், மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.(05)

# பொலிஸ் மா அதிபர் பதவிக்கு அடுத்தவாரம் புதிய நியமனம்

புதிய பொலிஸ் மா அதிபர் அடுத்த வாரம் நியமிக்கப்படுவார் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் சேவைக் காலம் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன மார்ச் 26 அன்று ஓய்வு பெறவிருந்த நிலையில் அவருக்கு மூன்று மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அடுத்த பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான தேபந்து தென்னகோன், நிலந்த ஜயவர்தன, லலித் பத்திநாயக்க, பிரியந்த வீரசூரிய மற்றும் அஜித் ரோஹன ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ள நிலையில் யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. (05)

# முத்துராஜா யானைக்கு நேர்ந்த விவகாரம்; தாய்லாந்து அரசிடம் கவலை தெரிவிப்பாம்

## பிரதமர் தினேஸ் உறுதியளிப்பு



தாய்லாந்து நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்துராஜா யானைக்கு நேர்ந்துள்ள நிலை தொடர்பில் இலங்கை அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் கவலை தெரிவிக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிர்க்கட்சி உறுப்பினர் டலஸ் அழகபெரும சபையில் வலியுறுத்தினார்.

தாய்லாந்து நாட்டுக்கு அரசமுறை பயணத்தின் போது இலங்கை அரசு என்ற ரீதியில் தாய்லாந்து அரசாங்கத்திடம் கவலை தெரிவித்துள்ளோம்.

யானை விவகாரத்தால் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் பாதிப்பு ஏற்படாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது,

விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தாய்லாந்து நாட்டினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்துராஜா யானையின் உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதையிட்டு நாடு என்ற ரீதியில் அனைவரும் கவலையடைய வேண்டும்.

இந்த யானை அளுத்கம கந்த விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டதை தொடர்ந்து அங்கு அந்த யானை உடலியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக ரெயா என்ற விலங்கின நலன்பேண் பாதுகாப்பு அமைப்பு அரசாங்கத்திடம் முறைப்பாடளித்துள்ளது.

முத்துராஜா யானை தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ரெயா அமைப்பு இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள தாய்லாந்து தூதரகத்தில் முறைப்பாடளித்துள்ளது.

இதனை தொடர்ந்து இந்த யானையை மீண்டும் தாய்லாந்துக்கு கொண்டுசெல்ல தாய்லாந்து தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிற நாடுகள் அன்பளிப்பாக வழங்கும் விலங்குகளை இலங்கை இவ்வாறான தன்மையில் தான் பாதுகாக்கிறது.

விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் பொறுப்பில் இருந்து விலகியுள்ளது என்ற நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது.

இது நாட்டுக்கு கரும்புள்ளியாக காணப்படுகிறது. ஆகவே தாய்லாந்து நாட்டினால் வழங்கப்பட்ட முத்துராஜா யானை விவகாரத்தில் அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் தாய்லாந்து அரசாங்கத்திடம் கவலை தெரிவிக்க வேண்டும். - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தாய்லாந்து நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்துராஜா என்ற யானை முன்னாள் ஜனாதிபதியால் அளுத்கம கந்த விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. விகாரைக்கு வழங்கப்பட்டதன் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது.

விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இந்த உடலியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக விலங்கின நலன் பேண் அமைப்புக்கள் முறைப்பாடளித்ததை தொடர்ந்து இந்த யானை தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலைக்கு விகாரையின் அனுமதியுடன் கொண்டு செல்லப்பட்டது. தற்போது யானைக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

இந்த யானை விவகாரம் தொடர்பில் கொழும்பில் உள்ள தாய்லாந்து தூதரகத்துடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். இருப்பினும் இந்த யானையை தாய்லாந்துக்கு கொண்டு செல்லும் உறுதியான நிலைப்பாட்டில் தாய்லாந்து அரசாங்கம் உள்ளது. - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அனுரபிரியதர்ஷனயாப்பா தாய்லாந்து நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட யானை பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயம் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் இராஜதந்திர மட்டத்தில் கவலை தெரிவிக்க வேண்டும். - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன அண்மையில் தாய்லாந்து நாட்டுக்கு அரசமுறை பயணத்தை மேற்கொண்டிருந்த போது முத்துராஜா யானை விவகாரம் தொடர்பில் நாடு என்ற ரீதியில் கவலை தெரிவித்துள்ளோம்.

ஆகவே தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. - என்றார். (05)

# கொழும்பு – 15 காக்கைதீவை அழகுபடுத்த கால்வாயைச் சுத்தப்படுத்தி அபிவிருத்தி









கொழும்பு-15, மட்டக்குளியில் அமைந்துள்ள காக்கைதீவு பகுதியை அழகுபடுத்துவது தொடர்பில் கடந்த மே மாதம் கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் ஆராய்ந்தனர்.

இது தொடர்பாக காக்கை தீவில் இடம்பெற்ற கூட்டத்தில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

குறிப்பாக, காக்கைதீவு பகுதியிலுள்ள கால்வாயை புனரமைத்து சுத்தப்படுத்துவது, காக்கைதீவு கடற்கரைப் பகுதி சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் மெருகூட்டுவது தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

இந்நிலையில் இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக காக்கை தீவு பகுதியில் நீண்டகாலமாக சுத்தப்படுத்தப்படாமலும் அபிவிருத்தி செய்யாமலும் காணப்படும் கால்வாயை புனரமைப்பது தொடர்பில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த கள ஆய்வுக்காக கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை குறித்த பகுதிக்கு, கொழும்பு மாநகர, அரச நிறுவனங்களின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பொறியியலாளர்கள், கொழும்பு மத்திய சுற்றாடல் அதிகாரி மற்றும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் லயன் மனோகரன் சிதம்பரம் உள்ளிட்டவர்கள் விஜயம் மேற்கொண்டனர்.

இதேவளை இது தொடர்பில் முன்னதாக, 18 ஆம் திகதி மே 2023 அன்று கொழும்பு மாநகர ஆணையாளரால் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னரே மே 25 ஆம் திகதி 2023 அன்று காக்கைதீவு பகுதி அபிவிருத்தி திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து உயர் அதிகாரிகளும் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது.

இதேவேளை, 7 ஜுன் 2023 அன்று கொழும்பு மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் முன்னேற்றக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிலையிலேயே ஜுன் 19 ஆம் திகதி குறித்த பகுதிக்கு, கொழும்பு மாநகர, அரச நிறுவனங்களின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பொறியியலாளர்கள், கொழும்பு மத்திய சுற்றாடல் அதிகாரி மற்றும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் லயன் மனோகரன் சிதம்பரம் உள்ளிட்டவர்கள் விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் லயன் மனோகரன் சிதம்பரம் தெரிவிக்கையில்,

'காக்கைதீவு பகுதியை அழகுபடுத்துவதே எனது முக்கிய குறிக்கோளாக அமைந்துள்ளது. அதிலும் நுளம்புகள் அற்ற காக்கை தீவை எதிர்காலத்தில் உருவாக்கும் நோக்கிலேயே கால்வாயை சுத்தப்படுத்தி அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த நடவடிக்கைக்கான 4 ஆவது கட்ட கூட்டம் இடம்பெற்றுள்ளது. வெகு விரைவில் இந்த நடவடிக்கையை நாம் மக்களுக்காக செயற்படுத்தவுள்ளோம். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்தை சந்தித்த ரணில் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்கள் தொடர்பில் ஆராய்வு!







ஐக்கிய இராச்சியத்துக்கான தனது விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் பெட்ரீசியா ஸ்கொட்லண்டை சந்தித்து பொதுநலவாய நாடுகளின் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான அரசாங்கத்தின் மூலோபாயங்கள் மற்றும் முயற்சிகளுக்கு பொதுநலவாய நாடுகளின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற முடியும் என்பது தொடர்பாகவும் கருத்துப் பரிமாறப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## 13 வயது மகள் மீது பாலியல் கொடுமை அவமானத்தால் விஷமருந்திய பெற்றோர்

### வெலிமடை பொலிஸ் நிலையத்துக்குள் சம்பவம்

13 வயதுடைய தமது மகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டதை அறிந்த தந்தையும் தாயும் வெலிமடை பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து விஷம் அருந்திய நிலையில் வெலிமடை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமி வெலிமடை நகரில் மாலை நேரத்தில் தனியாக காணப்பட்டதால் சந்தேகமடைந்த பொலிஸார் வெலிமடை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறுமி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மருத்துவ அறிக்கையைப் பெறுவதற்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்ததனையடுத்து சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்களை பதிவு செய்வதற்காக சிறுமியின் 42 வயதுடைய தந்தை மற்றும் 38 வயதுடைய தாயை பொலிஸார் வெலிமடை பொலிஸ் நிலையத்துக்கு வரழைத்துள்ளனர்.

இதன்போதே மகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பது பெற்றோருக்கு தெரியவந்ததுடன் அவர்கள் இருவரும் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து விஷம் அருந்தியுள்ளனர். இதனையடுத்து பொலிஸார் அவர்கள் இருவரையும் உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதேவேளை, சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பாம்!



ஜூன் மாதத்தின் முதல் 18 நாள்களில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, ஜூன் மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 52 ஆயிரத்து 663 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்தில், இந்தியாவில் இருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, ஜூன் மாதத்தில் இதுவரை மொத்தம் 15 ஆயிரத்து 406 இந்தியர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும், ரஷ்யாவிலிருந்து 4 ஆயிரத்து 748 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 3 ஆயிரத்து 905 பேரும், சீனாவிலிருந்து 2 ஆயி ரத்து 823 பேரும், ஆஸ்திரேலியாவிலிருந்து 2 ஆயிரத்து 688 பேரும், கனடாவிலிருந்து 2 ஆயிரத்து 503 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதத்தில் நாட்டுக்கு வந்துள்ளனர்.

மே மாதத்தில் மொத்தம் 83 ஆயிரத்து 309 சுற்றுலாப் பயணிகள் வந்தனர் எனவும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 5 லட்சத்து 77 ஆயிரத்து 149 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (05)

## டெங்கு நுளம்பிடம் இருந்து தப்பிக்க வெளிர் நிற நீள ஆடை அணியலாம்

### மேல்மாகாண கல்வி பணியகம் அனுமதி

டெங்கு நுளம்புகளிடம் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் நோக்கில் மேல் மாகாண பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் வெளிர் நிறமான நீளமான ஆடையை அணிவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை முதல் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண கல்விப் பணியகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் ஏனைய மாகாணங்களிலுள்ள பாடசாலைகளிலும் இந்தத் திட்டத்தை அடுல்படுத்துவதற்கு டெங்கு மற்றும் கொரோனா தடுப்புக்காக நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (05)

## உயர் இராணுவ அதிகாரிகளின் பாதுகாப்புக்கு 7 வாகனங்களா?

### நாடாளுமன்றில் சந்திம வீரக்கொடி கேள்வி



உயர் இராணுவ அதிகாரி ஒருவரின் வாகனத்துடன் ஏழு வாகனங்கள் பாதுகாப்பிற்காக சென்றமை தொடர்பாகக் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி கேள்வியெழுப்பியுள்ளார்.

உணவு கிடைக்காமல் மக்கள் அவதிப்படும் இந்த சந்தர்ப்பத்தில் இதுபோன்ற உயர் அதிகாரிகளுக்கு அதிகளவு பணத்தை செலவழிப்பது சரியா என்றும் அவர் நாடாளுமன்றில் கேள்வியெழுப்பியுள்ளார்.

மூன்று மாதங்களாக முதியோருக்கான உதவித்தொகையும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை வழங்கப்படவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறான சூழலில் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு ஏழு வாகனங்களை அணிவகுப்புக்கு அழைத்துச் செல்ல பணம் ஒதுக்கியது யார் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (05)

## காதலுக்கு எதிர்ப்புக் காட்டிய தந்தையை கத்தியால் குத்திக் கொலைசெய்த மகன்

காதலுக்கு எதிர்ப்புக் காட்டிய தந்தையை மகன் கத்தியால் குத்திப் படுகொலை செய்த சம்பவம் ஒன்று இலங்கையில் பதிவாகியுள்ளது. காலி மாவட்டம், நியாகமை பிரதேச செயலாளர் பிரிவில் இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய-வருவதாவது:-

நியாகமை பிரதேசத்திலுள்ள யுவதி ஒருவரை உயிரிழந்தவரின் மூத்த மகன் காதலித்து வந்துள்ளார். இதற்குத் தந்தை கடும் எதிர்ப்பைக் காட்டி வந்துள்ளார்.

இந்நிலையில், திங்கட்கிழமை இரவு வேலை முடிந்து வீட்டுக்கு மதுபோதையில் வந்த தந்தை, காதலுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கோரி மகனைத் தாக்கியுள்ளார். ஆத்திரமடைந்த மகன் கத்தியால் தந்தை மீது குத்தியுள்ளார். படுகாயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட தந்தை அங்கு உயிரிழந்தார். 45 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

கொலையாளியான 22 வயதுடைய மகனைக் கைது செய்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அமரகீர்த்தி அத்துக்கோரள கொலை: 39 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

### சட்ட மா அதிபரினால் கையளிப்பு





பொலன்னறுவை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரின் கொலைச் சம்பவம் தொடர்பில் 39 பேருக்கு எதிராக சட்ட மா அதிபரால் கம்பஹா மேல் நீதிமன்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குற்றப்பத்திரிகையை கையளிக்கப்பட்டது.

இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக கொலை உள்ளிட்ட 14 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட மா அதிபரால் தாக்கல் செய்-யப்பட்ட குற்றப்பத்திரிகை திறந்த நீதிமன்றில் உயர்நீதிமன்ற நீதிபதிகளான சஹான் மாபா பண்டார (தலைவர்), ரஷ்மி சிங்கப்புலி மற்றும் டி.ஏ. ருவன் பத்திரன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் கையளிக்கப்பட்டது.

குற்றப்பத்திரிகையை கையளித்ததன் பின்னர் நீதிமன்றில் வாதத்தை முன்வைத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, இது விசேட வழக்கு என்பதால் தினந் தோறும் அல்லது வாரத்தில் சில தினங்களில் வழக்கு விசாரணையை நடத்துமாறு கேட்டுக்கொண்டார். (05)

## காப்புறுதி நிறுவனங்கள் ; அவதானத்துடன் செயற்படுங்கள்

பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே காப்புறுதிக் கொள்கைகளை கொள்வனவு செய்யுமாறு இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு பொது மக்களை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத காப்புறுதி நிறுவனங்களால் மோசடி செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மோசடி நடவடிக்கைகள் 2000 ஆம் ஆண்டின் எண் 43 இன் காப்பீட்டுத் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிகளுக்கு முரணானவை என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் தொடர்பாக இணையத்தளத்தினூடாக தெரிவிக்குமாறு இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு பொதுமக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் காப்பீட்டுக் கொள்கைகள் தொடர்பான சட்டப்பூர்வ வழிகளைக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் , காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு பதிவு செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களின் பட்டியலை இணையதளத்தின் மூலம் பார்வையிட்டு செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது, (05)

## மீண்டும் பெற்றோருடன் வாழப்போவதில்லை கண்ணீருடன் சிறுவன் பொலிஸில் தெரிவிப்பு

பெற்றோரின் துன்புறுத்தல்களுக்கு உள்ளான அநுராதபுரத்தைச் சேர்ந்த, 15 வயதான சிறுவன் ஒருவன் வீட்டை விட்டுத் தப்பிச் சென்று ஹற்றன் ரயில் நிலையத்தில் சுற்றித் திரிந்த நிலையில் திங்கட்கிழமை காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளான். பெற்றோர் தன்னைக் கடுமையாகத் தாக்குகின்றனர் எனவும், தன்னைப் பாடசாலைக்குச் செல்ல விடாமல் தடுக்கின்றனர் எனவும், அவர்களது துன்புறுத்தல்களில் இருந்து தப்பிக்கவே இவ்வாறு வீட்டை விட்டு வெளியேறியதாகவும், பாணந்துறையில் உள்ள பாட்டியின் வீட்டுக்குச் செல்ல நினைத்துத் தவறான ரயிலில் ஏறியதாகவும், பின்னர் ஹற்றன் ரயில் நிலையத்தில் இறங்கியதாகவும், அச்சிறுவன் பொலி-ஸாரின் விசாரணையில் தெரிவித்துள்ளான்.

மேலும் தனக்கு ஒரு சகோதரனும் மூத்த சகோதரியும் இருக்கின்றனர் எனவும் அவர்கள் அநுராதபுரத்தில் வசித்து வருகின்றனர் எனவும் ,தான் பாணந்துறையில் உள்ள பாட்டியுடன் தங்கி பாடசாலை சென்று வந்ததாகவும் பின்னர் தரம் 10 இல் கல்வி கற்கும் போது பெற்றோரால் பாடசாலையில் இருந்து விலக்கப்பட்டதாகவும், தான் மீண்டும் பெற்றோருடன் வாழப் போவதில்லை எனவும் அச்சிறுவன் தெரிவித்துள்ளான்.

இந்நிலையில் குறித்த சிறுவனின் உடலில் கடுமையாகத் தாக்கப்பட்டமைக்கான அடையாளங்கள் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக முதுகுப் பகுதியில் இடுப்புப் பட்டியால் தாக்கப்பட்டமைக்கான அடையாளங்கள் காணப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

காலைக்கதிர் Kalaikkathir

# சமயக் கடமைகளுக்கு இடையூறு இன்றி பொது நிகழ்வுகளை ஒழுங்குசெய்யுங்கள்

## கிழக்கு ஆளுநரிடம் இம்ரான் எம்.பி கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்படும் பொது நிகழ்வுகள் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதி செய்துகொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்த கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதுதொடர்பில் ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

நாட்டின் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் அதிக முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்நிலையில் கிழக்கு மாகாணத்தால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளை முஸ்லிம்களின் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் ஒழுங்கு செய்வது தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2023.06.16 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற கல்விக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் தாங்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நியமனக் கடிதம் வழங்கி வைத்துள்ளீர்கள். இது குறித்து நான் மிகவும் சந்தோசமடைகின்றேன்.

எனினும், அன்றைய தினம் வெள்ளிக்கிழமை நாளாகும். முஸ்லிம்கள் ஜும்ஆத் தொழுகைக்கு செல்ல வேண்டிய நாள். அந்த வைபவத்தை ஒழுங்கு செய்தவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளாது அந்த நிகழ்வை நீட்டிச் சென்றதால் அந்த நிகழ்வில் கலந்து கொண்ட முஸ்லிம் அதிகாரிகள், நியமனம் பெற்ற ஆசிரியர்கள், அவர்களது பெற்றோர் எனப் பலரும் ஜும்ஆவுக்குச் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இது குறித்து பலரும் மிகவும் கவலையோடு எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

எனவே, கிழக்கு மாகாணத்தில் எதிர்காலங்களில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகள் எந்தவொரு சமய கடமைகளுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதி செய்துகொள்ளத் தேவையான அறிவுறுத்தல்களை அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)



# மனித மேம்பாட்டு அமைப்பின் தன்னார்வலருக்கான பொறுப்புச் சான்றிதழ், அடையாள அட்டை வழங்கல்







மனித மேம்பாட்டு அமைப்பின் தன்னார்வலருக்கான உத்தியோபூர்வ பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கும் செயற்திட்டம் அமைப்பின் தலைவர் எஸ். ஏ. முகம்மட் அஸ்லம் தலைமையில் சாய்ந்தமருது கமு ஃகமுஃ அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளரும் அமைப்பின் தேசிய அமைப்பாளருமான ஐ. எல். எம். இர்பான், மூத்த செய்தி நிருபரும், அமைப்பின் பிரதி தலைவருமான எம். ஐ. சம்சுதீன், அமைப்பினுடைய உயர்பீட உறுப்பினர்கள், பிரதேசஅமைப்பாளர்கள், அமைப்பின் கீழ் இயங்கும் பிரிவுகளின் தலைவர்கள் என்று பலர் பங்கேற்றனர்.

இதன் போது கடந்த காலங்களில் இவ் அமைப்போடு இணைந்து செயற்பட்டு வந்த அமைப்பின் பிரதேச அமைப்பாளர்கள், எச்.டி.ஜி. ஸ்ரீலங்காவின் கீழ் இயங்கும் பிரிவுகளின் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகளை அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் ஐ. எல். இர்பான் அவர்கள் வழங்கி உத்தியோகபூர்வமாக அமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டதோடு எதிர்கால செயற்திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. (05)

# தியாகிகள் தின சிரமதானம்



(அகீல்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 33ஆவது தியாகிகள் தின நிகழ்வுகள் வடக்கு, கிழக்கில் உணர்வு பூர்வமாக இடம்பெற்று வருகின்றன.

விடுதலைக்காய் உயிரிழந்த போராளிகளையும், பொதுமக்களையும் நினைவேந்தும் தியாகிகள் தின அஞ்சலி நிகழ்வையொட்டி பல்வேறு பிரதேசங்களிலும் சிரமதான மற்றும் இரத்ததான நிகழ்வுகளும் இடம் பெற்றுவருகின்றன.

இந்த வகையில் கிழக்கிலங்கையின் மண்டூர் 13 ஆம் கொலணி சங்கர் புரம் (13ஏ) முன்பள்ளியில் சிரமதான நிகழ்வு ஒன்று சிறப்புற இடம்பெற்றது.

சங்கர்புரம் முன்பள்ளிப்பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், கட்சித் தோழர்கள், பொது மக்கள் எனப் பல்வேறு தரப்பினரதும் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக மேற்படி சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை மற்றும் சுற்றுப் புறப்பகுதி விளையாட்டு மைதானம் என்பவற்றில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தோழர்நளினியின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிரமதானத்தில் கட்சி மத்திய குழு மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க கல்முனை கிளை வருடாந்த பொதுக்கூட்டம்







அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனைக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் கல்முனைக்கிளை உப தலைவர் எம்.எஸ். அப்துல் மலிக் தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித் கலந்து கொண்டார். மேலும் பல பிராந்திய பணிமனை பிரிவுத்தலைவர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலர் விரைவில் ஓய்வு பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டு அவர்களின் சேவை மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டி தொழிற்சங்கம் அவர்களுக்கு பாராட்டுச் சின்னமாக நினைவுச்சின்னங்களை வழங்கியது. பொது சுகாதாரத்தில் ஓய்வு பெறும் அதிகாரிகளின் பங்களிப்புகளுக்கு தொழிற்சங்கத்தின் நன்றியை தெரிவித்த அவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் தொடர்பிலும் இங்கு உரை நிகழ்த்தினர். அதனை தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# விதிகளை அமுல்படுத்துவதோடு நிறுத்தாமல் அதனை உடன் நடைமுறைப்படுத்தவேண்டும்

## நிரோஷன் பெரேரா வலியுறுத்து

விதிகளை அமுல்படுத்துவதோடு நிறுத்தாமல் அதனை நடைமுறைப்படுத்துவது அவசியம் என புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலக சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் பல்வேறு ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட சில அதிகாரிகள் சுயாதீனமாக நடந்து கொள்ள வில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

சுயாதீன ஆணைக்குழு சபை பலகைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

அந்தவகையிலேயே வரவு செலவுத் திட்ட அலுவலகத்தின் கருத்துரு நல்லதாக இருந்தாலும், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுமா என்ற சந்தேகம் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார். (05)







காலைக்கதிர்
Kalaikkathir

**வெளிநாட்டு .....**

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

ளில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை.

நான் மனித கடத்தல் காரர்களுக்கு அடிபணிந்து செயற்பட்டிருந்தால் அது தொடர்பில் பிரதான ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கும். பாராளுமன்றத்திலும் பேசப்பட்டிருக்கும். ஆனால் அதுப்பற்றிய எவ்வித முறைப்பாடுகளும் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லை.

அடிப்படையற்ற செய்திகள் ஊடகங்களில் வெளியிடப் படுவதை தடுப்பதற்காகவே ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் அவசியப் படுகின்றது. கடந்த காலங்களில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பல்வேறு வெளிநாட்டு வேலை வாய்ப்புநிறுவனங்கள்தடைச் செய்யப் பட்டன.

நான் அவர்களுக்குச் சார்பாக செயற்பட்டிருந்தால் அவ்வாறு நடந்திருக்குமா? அத்தோடு எவரினதும் கௌரவத்தை சிதைக்காத வகையில் ஊடகங்கள் செயற்பட வேண்டியது அவசியமாகும் - என்றார்

**மட்டு. ....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைக்கு மத்தியில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் மாவட்ட மட்டத்தில் பொது மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் மட்டக்களப்புமாவட்டத்தில்சிவனேச துரை சந்திரகாந்தன், சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோருடன் இணைந்து இவரும் பணியாற்றவுள்ளார்.

# ஜனநாயக ரீதியில் ஆட்சிக்கு வரமுடியாதோர் சதி மூலம் ஆட்சியைப் பிடிக்க முயல்கின்றனர்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க காட்டம்

மூன்று சதவீத உறுப்பினர்களை வைத்து ஜனநாயகத்தின் மூலம் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் சதி மூலம் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றனர். மக்கள் ஏற்கனவே அவர்களைநிராகரித்துவிட்டனர். போராட்டத்தில் இருந்து அலையை உருவாக்க முயன்றனர், ஆனால் தற்போது அந்த அலை மணலில் புதைந்து விட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்துவதற்காக மக்கள் மீண்டும் மொட்டுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். 69 இலட்சம் என்ற ஆணையை ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டோம்.

இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டி தொகுதிக் கூட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2015 மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியின் பின்னர் ஆரம்பமான கட்சி. மஹிந்த ராஜபக்ஷ பற்றி நாம் புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் அச்சமின்றி, சந்தேகமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்கியவர். மட்டுமன்றி, நெடுஞ்சாலைகளை அமைத்து நாட்டை அபிவிருத்தி செய்த தலைவர் அவர்.

இந்த கட்சி நல்ல அடித்தளத்தில் கட்டப்பட்ட கட்டடம். எங்களிடம் நல்ல உறுப்பினர்கள் குழு உள்ளது. ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கு சவால்விடக்கூடிய வேறு எந்த அரசியல் கட்சியும் இன்று இல்லை. அதனால்தான் இக்கட்சியின் தலைமையை அழிக்க போராட்டக்காரர்கள் பாடுபட்டனர். 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ பெரும் நம்பிக்கையுடன் வெற்றிபெற்றதைக் கண்டோம்.

தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரம் எமக்கு வழங்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, கொவிட் வைரசால் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் சரிந்தது. நாமும் அந்தச் சவாலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது அனுபவம் வாய்ந்த அமைச்சர் குழுவை நாங்கள் வைத்திருந்தோம். ஆனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு எரிபொருள் வரிசைகள் உருவாக்கப்பட்டபோது அந்த அமைச்சர்களால் தீர்வுகளை வழங்க முடியவில்லை.

கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டபோது எங்கள் கட்சி பெரும் புயலில் சிக்கியது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டன.

கட்சியினர் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருந்தது. இந்த நேரத்தில், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கலைந்துவிடும் என்று பலர் நம்பினர். ஆனால் இன்றும் இந்த நாட்டில் மிகவும் பலமான மற்றும் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனதான்.

கடந்த ஆண்டு நீங்கள் நியமித்த தலைவர் பதவியை விட்டு வெளியேறினார். மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். அமைச்சரவை வெளியேறியது.

அதன்பிறகு, 69 இலட்சம் மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய அரசை அமைக்க விரும்பினோம். அதன்படி நாட்டை கட்டியெழுப்பக்கூடிய தலைவரை அழைத்தோம். பல தலைவர்கள் அழைப்பை ஏற்கவில்லை. ஆனால் பின்னர் நாட்டின் தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்க கட்சி தீர்மானித்தது. இரண்டு எதிரிகள் சேர்ந்து என்ன செய்கிறார்கள் என்று பலர் கேட்கிறார்கள்.

69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் நிபந்தனையின்றி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கிறோம். அன்று ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு உதவுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து இன்று நான் மகிழ்ச்சியடைகிறேன். அப்போது அவர் சவாலை ஏற்று நாட்டை கட்டியெழுப்புவார் என நினைத்தோம். வீழ்ந்த நாட்டை கட்டியெழுப்புதற்காக எடுக்கப்பட்ட சில முடிவுகள் மக்கள் ஆதரவு கிடைக்கும் முடிவுகள் அல்ல. ஆனால் அவை மிகவும் நல்ல முடிவுகள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனநாயக ரீதியாகவும் அகிம்சை ரீதியாகவும் செயற்பட்டு இறுதியில் ஜனாதிபதி பதவியைவிட்டுவெளியேறவேண்டியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போராடிய தலைவர் தனது வீடு தீக்கிரையாக்கப்பட்ட போது ஏன் அமைதியாக இருந்தார் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இவற்றை போராட்டக்காரர்கள் பயன்படுத்திக்கொண்டனர்.

மக்கள் மனதில் வெறுப்பையும் குரோதத்தையும் திணித்தவர்கள். கடந்த காலங்களில், வீதிகள் அமைக்கும் போது, 10 சதவீதம் கமிஷன் வாங்குவதாக விளம்பரம் செய்தனர். இந்தக் கதைகளினால் எமது நாடாளுமன்ற உறுப்பின்ர்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்கத் தொடங்கினர். வயதானமைனா என்று ராஜபக் ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். கொரோனாவால் இரண்டு வருடங்கள் வேலை செய்ய முடியவில்லை. அன்றைய தினம் மக்களின் உயிரைக் காப்பாற்ற போராட வேண்டியிருந்தது. நமது தலைவர்கள் மக்களுக்காக உழைத்தவர்கள். நாங்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளத் தொடங்கியவுடன் போராட்டம் தொடங்கியது.

ஆனால், குறுகிய காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டை புதுப்பித்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடிந்ததையிட்டு இன்று நாம் மகிழ்ச்சியடைகிறோம். புயலில் சிக்கினாலும் உயரமான மரங்கள் மீண்டும் நேராகின்றன. புயலில் சிக்கிக்கொண்டோம். நாங்கள் மீண்டும் வலுவாக எழுகிறோம். ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஒரு வன்முறையற்ற கட்சி. 88 / 89 பயங்கரவாதத்தின் சகாப்தம் பெரியவர்களுக்கு நினைவிருக்கலாம். மாலை ஆறு மணிக்குள் சாலைகள் மூடப்படும் அடையாள அட்டையை கொள்ளையடித்தவர்கள் இன்று ஜனநாயகம் பற்றி பேசுகிறார்கள்.

மூன்று சதவீத உறுப்பினர்களை வைத்து ஜனநாயகத்தின் மூலம் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் சதி மூலம் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றனர். மக்கள் ஏற்கனவே அவர்களைநிராகரித்துவிட்டனர். போராட்டத்தில் இருந்து அலையை உருவாக்க முயன்றனர், ஆனால் தற்போது அந்த அலை மணலில் புதைந்து விட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்துவதற்காக மக்கள் மீண்டும் மொட்டுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். 69 இலட்சம் என்ற ஆணையை ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டோம். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2023இல் வெளியிடப்பெற்றது.